# இலக்கணம் - பெயர்ச்சொல்லின் வகையறிதல்

**பெயர்ச்சொல் என்றால் என்ன?**
ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும். அது இடுகுறியாகவோ காரணமாகவோ இருக்கலாம்.

**இடுகுறிபெயர்:**
ஒரு பொருளுக்கு எந்த காரணமும் இல்லாமல் இட்டு வழங்கிய பெயரே இடுகுறிப்பெயர்.
**(எ.கா):**
மரம்,மலை,மண்

**காரணப்பெயர்:**
ஒரு பொருளுக்கு காரணம் கருதி இட்டு வழங்கிய பெயரே காரணப்பெயர்.
**(எ.கா):**
நாற்காலி,கருப்பன்,

**பெயர்ச்சொல்லின் வகைகள்**
பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

1. பொருட் பெயர்
2. இடப் பெயர்
3. காலப் பெயர்
4. சினைப் பெயர்
5. பண்புப் பெயர்
6. தொழிற் பெயர்

| பொருட்பெயர் | மனிதன், ஆடு, பந்து |
|---|---|
| இடப்பெயர் | மதுரை , தமிழகம், இந்தியா |
| காலப்பெயர் | மணி, கிழமை, வாரம்,மாதம், இளவேனில் |
| சினைப்பெயர் | கண், காது, கை, கால் |
| பண்புப்பெயர் | கசப்பு , மஞ்சல்,அகலம், வட்டம் |
| தொழிற்பெயர் | பாடுதல், ஓடுதல் , உறங்குதல் |

**1. பொருட் பெயர்**
ஒரு பொருளைக் ( உயர்திணை மற்றும் அஃறிணை பொருளை) குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும்.
**(எ.கா):**
உயர்திணை : மலர்விழி,
உயிருள்ள அஃறிணை : பசு, குதிரை
உயிரற்ற அஃறிணை : கணினி, மலை

**2. இடப் பெயர்**
ஒரு இடத்தை (பொது இடப் பெயர் மற்றும் சிறப்பு இடப் பெயர்) சுட்டுகின்ற பெயர் இடப் பெயர் எனப்படும். **(எ.கா):**
பொது இடப் பெயர் : கோயில், ஊர் , மாவட்டம்
சிறப்பு இடப் பெயர் : இலங்கை, சென்னை

**3. காலப் பெயர்**
ஒரு காலத்தை ( பொதுக் காலப் பெயர் மற்றும் சிறப்புக் காலப் பெயர்) குறிக்கும் பெயர் காலப் பெயர் எனப்படும்
**(எ.கா):**
பொதுக் காலப் பெயர் : ஆண்டு, விநாடி, கிழமை, மாதம்
சிறப்புக் காலப் பெயர் : பங்குனி, இளவேனில்

**4. சினைப் பெயர்**
உறுப்புகளைக் (உயர்திணை மற்றும் அஃறிணைப் பொருள்களின் உறுப்புகளையும்) குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்
**(எ.கா):**
உயர்திணை சினைப் பெயர் : கைவிரல், கால்விரல்
அஃறிணை சினைப் பெயர் : மரக்கிளை, பூக்காம்பு

**5. பண்புப் பெயர்**
ஒரு பொருளின் பண்பைக் (வடிவம், சுவை, அளவு, குணம்) குறிக்கும் பெயர் பண்புப் பெயர் எனப்படும்.
**(எ.கா):**
வட்டம், கசப்பு, மூன்று, தீமை

**6. தொழிற் பெயர்**
ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற் பெயர் எனப்படும்.
**(எ.கா):**
உறங்குதல்

தொழிற் பெயர் இரண்டு வகைப்படும்

**(i). முதல்நிலை தொழிற்பெயர்**
பெரும்பாலும் வேர்ச்சொல்லாகவே வரும் முதலெழுத்து குறிலாக இருக்கும் அவை முதல்நிலை தொழிற்பெயர்
**(எ.கா):**
பெறு , சுடு

**(ii). முதற்நிலைத் திரிந்த தொழிற்பெயர்**
முதற்நிலைத் தொழிற்பெயரின் முதலெழுத்து நீண்டு வருமாயின் அது
முதற்நிலைத் திரிந்த தொழிற்பெயராகும்.
**(எ.கா):**
கெடுதல் - தொழிற்பெயர்
கெடு - முதற்நிலைத் தொழிற்பெயர்
கேடு - முதற்நிலை திரிந்த தொழிற்பெயர்